# QB365 Question Bank Software Study Material

## புவியியல் - பேரிடர் மேலாண்மை - பேரிடரை எதிர்கொள்ளுதல் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) இந்தியாவில் ஒவ்வொருநாளும் எத்தனை ஆண்கள் பெண்கள் தீவிபத்தினால் இறக்கின்றனர்?

**பதில் :** 1. ஆண்கள் - 21 சதவீதம்

2. பெண்கள் - 42 சதவீதம்

2) நிலநடுக்கம் ஏற்படும் போது நீங்கள் ஒருவேளை எந்த மரசாமான்களும் இல்லாத அறையில் இருந்தால் எவ்வாறு உங்களைத் தற்காத்துக் கொள்வீர்கள்?

**பதில் :** அறையில் மூலையில் குத்துகாலிட்டு அமர்ந்து இரு கைகளாலும் தலையை மூடிக் கொள்ள வேண்டும்.

3) கலவரத்தின்போது வாகனத்தில் சிக்கிக் கொண்டால் நீங்கள் என்ன செய்யவேண்டும்?

**பதில் :** (i) கூட்டத்தின் வழியாக வாகனத்தை ஓட்டக்கூடாது.

(ii) நீங்கள் கலவரத்தில் சிக்கியிருந்தால் கூட்டத்தின் விளிம்பு பகுதிக்குப் பாதுகாப்பாகச் செல்லவும்.

(iii) முதல் முயற்சியில் கூட்டத்திலிருந்து வெளியேறி அருகில் உள்ள கட்டடம் அல்லது சரியான வெளியேறும் வழி அல்லது சந்து வழியே செல்லவேண்டும் அல்லது கூட்டம் களைந்து செல்லும்வரை தங்குமிடத்தில் அடைக்கலம் புகலாம். இச்சமயத்தில் கோபம் கொள்ளுதலைத் தவிர்க்க வேண்டும்.

4) காட்டுத் தீ எதனால் ஏற்படுகின்றது?

**பதில் :** வெப்பமான மற்றும் வறண்ட காலத்தில் அடர்ந்த மரங்கள் காணப்படும் பகுதிகளில் காட்டுத்தீ ஏற்படுகிறது. இது காடுகள். புல்வெளிகள், புதர்கள் மற்றும் பாலைவனங்கள் போன்ற பகுதிகளில் ஏற்படுகிறது. மேலும் இது காற்றின் மூலம் விரைவாகப் பரவுகிறது.

5) நவீன பேரிடர் மேலாண்மை என்றால் என்ன?

**பதில் :** நவீன பேரிடர் மேலாண்மை என்பது பேரிடருக்கு முந்தைய திட்டமிடல், தயார் நிலை செயல்பாடுகள். நிறுவன திட்டமிடல், பயிற்சி, தகவல் மேலாண்மை, பொது தொடர்புகள் மற்றும் பிற துறைகளை உள்ளடக்கியது ஆகும்.

6) பேரிடர் மேலாண்மை விளக்குக.

**பதில் :** பேரிடர் மேலாண்மை என்பது தடுத்தல், தணித்தல், தயார்நிலை, எதிர்கொள்ளல் மற்றும் மீட்டல் போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

7) சிறுகுறிப்பு தருக.

(i) நிலநடுக்க மையம்

(ii) மையப்புள்ளி

(iii) சீஸ்மோகிராய்

**பதில் :** (i) நிலநடுக்க மையம் புவியின் உட்பகுதியில் நிலநடுக்கம் தோன்றுமிடத்தை நிலநடுக்க மையம் என்கிறோம்.

(ii) மையப்புள்ளி-நிலநடுக்க மையத்திற்கு செங்குத்தாக புவியின் மேற்பரப்பில் காணப்படும் இடத்திற்கு மையப்புள்ளி எனப் பெயராகும்.

(iii) சீஸ்மோகிராப் நிலநடுக்கம் சீஸ்மோகிராப் என்ற கருவியால் பதிவு செய்யப்படுகிறது. இது ரிக்டர் அளவையில் அளக்கப்படுகிறது.

8) கலவரம் என்றால் என்ன?

**பதில் :** கலவரம் என்பது ஒரு நாடகம் போன்று தோற்றமளித்தாலும் கோபமடைந்த கும்பல் ஏதாவது ஒரு இயற்கைப் பேரிடரைப் போலவே யூகிக்க முடியாத மிகவும் ஆபத்தானவர்கள். உலகளவில் ஆயிரக்கணக்கான மக்கள் கலவரத்தால் உயிரிழக்கின்றனர்.

9) பேரிடர் எதிர்கொள்ளலின் நிலைகள் யாவை?

**பதில் :** 1. இயற்கை கட்டமைப்பை நிலைநிறுத்துதல்.
2. பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புணர்வாழ்வளித்தல்.
3. பாதிப்படைந்த அடிப்படை கட்டமைப்பை நிலைநிறுத்த மறுசீரமைப்பு முயற்சிகள் செய்தல், இழந்த வாழ்வாதாரத்தைப் புணரமைப்பது.

10) ஆழிப் பேரலையின் போது கடற்கரைப் பகுதியில் உள்ள கட்டிடங்களைவிட்டு மக்கள் விலகியிருக்க வேண்டும், ஏன்?

**பதில் :** கட்டிடம் நீர் சூழ்ந்து காணப்படுவதால், வெள்ளப்பெருக்கு போன்றே சுனாமி வெள்ளம் கட்டிடத்தின் அடித்தளத்தை வலிமையற்றதாக்கி கட்டிடத்தை மூழ்கடிக்கலாம், தலையில் விரிசலை ஏற்படுத்தலாம் அல்லது சுவரை உடைத்து சரிவடைய செய்யலாம். எனவே மக்கள் அத்தகைய கட்டிடங்களை விட்டு விலகியிருக்க வேண்டும்.

## 3 மதிப்பெண் வினாக்கள்

10 x 3 = 30

11) பேரிடர் முதன்மை மீட்புக் குழு என்பவர் யாவர்?

**பதில் :** 1. காவலர்கள்
2. தீயணைப்புத் துறையினர்
3. அவசர மருத்துவக் குழுக்கள்

12) ஜப்பானில் மிக அதிக அடர்த்தியில் நிலநடுக்க வலை காணப்பட்டாலும் இந்தோனேசியாவில் தான் மிக அதிக அளவில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. ஏன்?

**பதில் :** இந்தோனேசியா, ஜப்பானைவிட அதிக பரப்பளவைக் கொண்டுள்ளதால் இந்தோனேசியாவில் மிக அதிக அளவில் நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

13) சுனாமிக்குப் பிறகு என்ன செய்யவேண்டும்?

**பதில் :** 1. ஆழிப் பேரலை தொடர்பான அண்மைச் செய்திகளை வானொலி அல்லது தொலைக்காட்சியின் மூலம் அறிந்து கொள்ள வேண்டும்.
2. நமக்கு காயம் ஏற்பட்டுள்ளதா எனக் கண்டறிந்து முதலுதவி பெறவேண்டும்.
3. காயமடைந்த அல்லது சிக்கிக்கொண்ட பிற நபர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
4. ஆழிப்பேரலையிலிருந்து யாரையாவது மீட்கவேண்டுமென்றால் சரியான உபகரணங்களுடன் கூடிய வல்லுநர்களை உதவிக்கு அழைக்க வேண்டும்
5. சிறப்பு உதவி தேவைப்படும் குழந்தைகள், முதியோர். ஊனமுற்றோர். போக்குவரத்து வசதியில்லாதவர்களுக்கு உதவி செய்திட வேண்டும்.
6. எரிவாயு கசிவை உணர்ந்தால் உடனடியாக சன்னல்களைத் திறந்துவிட்டு விட்டு அனைவரையும் வெளியேறச் செய்ய வேண்டும்.

14) பேரிடர் மேலாண்மை சுழற்சியின் நான்கு நிலைகள் யாவை?

**பதில் :** 1. தயார் நிலை
2. மட்டுப்படுத்துதல்
3. மீட்பு
4. திட்டமிடல்
5. தடுத்தல்
6. புனர்வாழ்வு
7. மறுசீரமைப்பு

15) நிலநடுக்கத்தின்போது வாகனத்தில் சிக்கிக் கொண்டால் நீங்கள் என்ன செய்யவேண்டும்?

**பதில் :** 1. உடனடியாக வாகனத்தை நிறுத்த வேண்டும். வாகனத்தை கட்டிடத்திற்கு அருகிலோ, மரங்கள், மின் கம்பங்கள் மற்றும் மேம்பாலங்களுக்கு அடியிலோ நிறுத்தக் கூடாது.
2. நிலநடுக்கம் நின்றவுடன் கவனமாகப் பாதைகளைக் கடந்து செல்ல வேண்டும். நிலநடுக்கத்தால் சேதமடைந்த சாலைகள், பாலங்கள், சரிவுப் பாதைகள் போன்றவற்றைத் தவரிக்க வேண்டும்.

16) கலவரத்தின் போது வாகனத்தில் சிக்கிக் கொண்டால் நீங்கள் என்ள செய்ய வேண்டும்?

**பதில் :** 1. வாகனத்தை நிறுத்திவிட்டு கூட்டத்தின் விளிம்பு பகுதிக்குப் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும்.
2. முதல் முயற்சியில் கூட்டத்தைவிட்டு வெளியேறி அருகில் உள்ள கட்டடம் அல்லது வெளியேறும் வழி அல்லது சந்தின் வழியே செல்ல வேண்டும்.
3. கூட்டம் கலைந்து செல்லும் வரை தங்குமிடத்தில் அடைக்கலம் புகவேண்டும்.

17) பேரிடர் என்றால் என்ன?

**பதில் :** பேரிடர் என்பது உயிருக்கும் உடைமைகளுக்கும் அழிவையும் சேதத்தையும் ஏற்படுத்தும் பேராபத்தாகும்.

18) பேரிடர் எதிர் கொள்ளல் என்றால் என்ன?

**பதில் :** 1. இயற்கை கட்டமைப்பை நிலை நிறுத்துதல், பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர் வாழ்வளித்தல். இழந்த பொருளாதாரத்தைப் புனரமைப்பது.
2. பாதிப்படைந்த அடிப்படைக் கட்டமைப்பை நிலைநிறுத்த மறுசீரமைப்பு முயற்சிகள் மேற்கொள்ளுதல் போன்றவை உள்ளடங்கியதே பேரிடர் எதிர்கொள்ளல் ஆகும்.

19) நில நடுக்கம் புவித்தட்டுகளின் எல்லைகளில் ஏற்படுகிறது.

**பதில் :** 1. புவியின் உட்பகுதியில் நிலநடுக்கம் தோன்றுமிடத்தை நிலநடுக்க மையம் என்கிறோம்.
2. நிலநடுக்கம் சீஸ்மோக்ராப் என்ற கருவியால் பதிவு செய்யப்படுகிறது.
3. இது ரிக்டர் அளவையில் அளக்கப்படுகிறது.

20) நிலநடுக்கத்தின் போது ஓடும் வாகனத்தில் இருந்தால் என்ன செய்வீர்?

**பதில் :** 1. உடனடியாக வாகனத்தை நிறுத்துவேன்.
2. வாகனத்தை கட்டடங்கள், மரங்கள் மின்கம்பங்கள் இல்லாத இடத்தில் நிறுத்துவேன்.
3. நிலநடுக்கம் நின்றவுடன் கவனமாகப் பாதைகளைக் கடந்து செல்வேன்.

## <u>5 மதிப்பெண் வினாக்கள்</u> 5 x 5 = 25

21) ஆழிப் பேரலையைப் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

**பதில் :** 1. நில நடுக்கம், கடலுக்கடியில் ஏற்படும் நிலச்சரிவு. எரிமலை வெடிப்பு மற்றும் குறுங்கோள்கள் போன்றவற்றால் ஏற்படும் தொடர் பெருங்கடல்களின் அலைகளே ஆழிப்பேரலையாகும்.
2. ஆழிப்பேரலையானது 10 - 30 மீட்டர் உயரத்தில் மணிக்கு சுமார் 700 800 கி.மீ.வேகத்தில் செல்லக்கூடியது.
3. இது வெள்ளப் பெருக்கை உண்டாக்கி உயிர்ச்சேதத்தையம் பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது.

22) நிலநடுக்கத்தின் போது கட்டடத்திற்குள் இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

**பதில் :** 1. நிலநடுக்கத்தின் போது நான் கட்டடத்திற்குள் இருந்தால் மேசையின் அடியில் தரையில் மண்டியிட்டு அமர்ந்து மேசையின் காலை ஒரு கையால் பிடித்துக் கொண்டு. ஒரு கையால் தலையை மூடிக் கொள்ளவும். அறையில் எந்த மரச்சாமான்களும் இல்லையெனில், அறையின் மூலையில் குத்துக்காலிட்டு அமர்ந்து இரு கைகளாலும் தலையை மூடிக்கொள்ளவும்.
2. அறையின் மூலையில் மேசையின் அடியில் அல்லது கட்டினுக்கு அடியில் அமர்ந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும்,
3. கண்ணாடிச் சன்னல். வெளிக்கதவுகள், சுவர் மற்றும் எளிதில் விழக்கூடிய தொங்கும் மின்விளக்குகள் மற்றும் மரச்சாமான்கள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கவும்.
4. நிலநடுக்கம் முடியும் வரை உள்ளே பாதுகாப்பாக இருக்கவும். அதன்பிறகு வெளியேறுவது பாதுகாப்பானது.

23) ஆழிப் பேரலையை எவ்வாறு எதிர்கொள்வாய்?

**பதில் :** 1. முதலில் நீங்கள் இருக்கும் வீடு, பள்ளி,பணிபுரியுமிடம் அடிக்கடி சென்று வருமிடம் போன்றவை கடலோர ஆழிப் பேரலை பாதிப்பிற்குட்பட்ட இடங்களா எனக் கண்டறியவும்.
2. ஆழிப் பேரலை பாதிப்புள்ளாகும் உங்கள் வீடு, பள்ளி. பணிபுரியுமிடம், அடிக்கடி சென்று வருமிடம் போன்றவற்றிலிருந்து வெளியேறும் வழியைத் திட்டமிடவும்.
3. ஆழிப் பேரலை தொடர்பான எச்சரிக்கைத் தகவல்களை அறிந்து கொள்ள உள்ளூர் வானொலி அல்லது தொலைக்காட்சியைக் காணவும்.
4. ஆழிப் பேரலையைப் பற்றி குடும்பத்துடன் கலந்துரையாடவும். ஆழிப் பேரலையின் போது என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.
5. ஆழிப் பேரலையைப் பற்றி முன்கூட்டியே கலந்துரையாடுவது அவசர நிலையில் ஆழிப் பேரலைப் பற்றிய பயத்தைக் குறைக்கவும் மதிப்புமிக்க நேரத்தைச் சேமிக்கவும் உதவும்.

24) தீவிபத்தின்போது என்ன செய்யவேண்டும் என மூன்று வாக்கியங்களில் எழுது .

**பதில் :** 1. கட்டடத்தை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும்.
2. மற்றவர்களையும் உடனடியாக வெளியேறச் செய்யவேண்டும்.
3. தீ விபத்தின்போது ஓடாமல் நடந்து வெளியேறும் பகுதிக்குச் செல்ல வேண்டும்.
4. மின்தூக்கிகள் பழுதடைந்திருக்கலாம். எனவே அதைப் பயன்படுத்தக் கூடாது.
5. வீடு, பள்ளி, அடிக்கடி சென்று வருமிடம் போன்றவற்றிலிருந்து வெளியேறும் வழியைத் திட்டமிடுவேன்.
6. ஆழிப்பேரலை தொடர்பான எச்சரிக்கைத் தகவல்களை அறிந்துகொள்ள வானொலி அல்லது தொலைக்காட்சியைக் காண்பேன்.
7. ஆழிப்பேரலையைப் பற்றி குடும்பத்துடன் கலந்துரையாடுவேன்.
8. கலந்துரையாடலின் மூலம் ஆழிப்பேரலையின் போது என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்வேன்.

25) கலவரத்தில் சிக்கிக் கொண்டால் செய்ய வேண்டியன யாவை?

**பதில் :** 1. கலவரத்தில் சிக்கியிருந்தால் கூட்டத்தின் விளிம்பு பகுதிக்குப் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும்.
2. முதல் முயற்சியில் கூட்டத்திலிருந்து வெளியேறி அருகில் உள்ள கட்டடம் அல்லது சரியான வெளியேறும் வழி அல்லது சந்து வழியே செல்ல வேண்டும்.
3. கூட்டம் கலைந்து செல்லும் வரை தங்குமிடத்தில் அடைக்கலம் புகவேண்டும்.
4. கலவரத்தின் போது காவல்துறை அல்லது பாதுகாப்புப்படையினர் பணி செய்யுமிடங்களுக்குச் செல்லக் கூடாது.
5. கலவரத்தின் போது நாம் கைது செய்யப்பட்டால் அவர்களை தடுக்க முயலக்கூடாது.
6. சட்ட ஆலோசகரின் துணையுடன் இக்கட்டான நிலைக்கான தீர்வைக்காண வேண்டும்.
7. துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டால் தரையில் கிடைமட்டமாகப் படுத்துக்கொண்டு தலையையும் கழுத்தையும் மூடிக்கொள்ள வேண்டும்.